# 22 மொழியுடன் இசைக்கலை படைப்பு ஒப்படைகள்

**இலக்கு**

பின்வரும் கருத்திட்டங்கள் மாணவர்கள் தம் ஆக்கத்திறனை வளர்க்கத் துணைசெய்வன. அவை கலை மற்றும் மொழிச் செயற்பாடுகளை இணைத்து கவர்ச்சியான ஆக்கங்களுக்கு இட்டுச் செல்கின்றன, அவை மேலும் உள்நோக்கினை ஊட்டுகின்றன.

## 1. பேச்சுக் குமிழிகளுடன் சிந்தித்தல்

2 - 9 ஆந் தரம் | 15 - 20 மணித்துளிகள்

கருவிகள்:
செய்தித்தாள்கள் அல்லது இதழ்களிலிருந்து வெட்டிய ஒளிப்படங்கள்.

மாணவர்கள் ஒரு படத்தை அல்லது புகைப்படத்தைத் தேர்ந்தெடுத்து அதிலுள்ள ஆள் என்ன நினைக்கிறார் அல்லது சொல்கிறார் என்பதை முடிவுசெய்ய வேண்டும். பின்னர் அவர்கள் ஒரு பேச்சுக் குமிழியை கீறுகின்றனர், அதை வெட்டி எடுத்து அப்படத்தில் ஒட்டுகின்றனர். பேச்சுக் குமிழி எழுத்துருக்கள் உண்மையாகவும், குறும்பாகவும் அமையலாம்.




மாற்றுகள்: பேச்சுக்குமிழி உரையாடல்கள் இருவர் அல்லது பல பேருடன்/புகைப்படத்துக்காக கீறிய படங்கள் (மோனலிசா, முதலியன) smileys (உணர்வுகள் எ.கா…: படங்களுக்காக ☹ ☺ / பேச்சுககுமிழிகளை நீக்கிய எழுத்துடன் நகைச்சுவை நகல் ஒன்று, இதனால் மாணவர்கள் தத்தம் பதிப்புகளை உருவாக்கவும் அவற்றை அவர்கள் ஒப்பிடவும் முடியும்.

## 2. சுயமாக கேலிச்சித்திரம் உருவாக்குதல்

2 - 7 ஆந் தரம் | 30 - 60 மணித்துளிகள்

கருவிகள்:
விரலடையாளங்களுக்கான மைமுத்திரை, தாள்

ஆசிரியர் செயற்பாட்டினை விளக்குகிறார்: இணையர்களாக, மாணவர்கள் 4 – 6 படங்களுடன் நகைச்சுவை ஒன்றுக்கு ஒரு சிறுகதை (அல்லது படக்கதை) பற்றி எண்ணுவர். கதை குறைந்தது இரண்டு ஆட்களை கொண்டமைய வேண்டும் இதனால் அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வர்;
ஒரு விலங்கை/செல்லமானதைச் சேர்த்துக்கொள்ளலாம். வடிவங்களைக் கீறுவதற்குப் பதிலாக உடல்களும் தலைகளும் கைவிரலடையாளங்களால் உருவாக்கலாம். பின்னர் கைகளையும் கால்களையும் கீறிக்கொள்ளலாம், இது வேடிக்கையான உருவங்களை உருவாக்கும். அடுத்து எழுத்துரு பேச்சுக்குமிழிகளில் எழுதப்படும். மாணவர்கள் இத்தகைய எழுத்துரு அதன்வாய்ப்புகள் ஆகியவற்றுடன் பழக்கம் பெறுவதற்கு முதலில் சில நகைச்சுவைகள் அல்லது படக்கதைகளைப் பார்ப்பது துணையாக அமையும்.
விரிவாக்கிய பணி: ஒரு முழுமையான நகைச்சுவைச் சிறுநூலை கூட்டாக உருவாக்கல் கதைக்கு எல்லா மாணவர்களும் ஒரே பெருங்கதாமாந்தர்களையும் காட்சியமைப்பையும் தேர்ந்தெடுப்பின் இது குறிப்பாக ஈர்ப்பதாக அமையும்.